தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 12, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, ஏப்ரல் 25, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து''.

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து கொடுத்து கவனித்துக் கொள்பவன் என்று மருத்துவ முறை நான்கு வகைப் பாகுபாடு உடையது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 785 மற்றும் 2636 சற்று பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரின் குழந்தைகளுக்குக் கல்லூரிப் படிப்பு வரை இலவசக் கல்விச்சலுகை.

* 795—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள விதவைகள், கணவனால் கைவிடப் பட்ட பெண்கள் இவர்களின் குழந்தைகளுக்குக் கல்லூரிப் படிப்பு வரை இலவசக் கல்விச் சலுகை அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) அவர்களின் படிப்பு முடிந்தவுடன் வேலை வாய்ப்புக் கொடுப்பதில் முன்னுரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள். விதவைகளாக இருக்கக்கூடிய பெண்கள், படித்துவிட்டு, உண்மையிலேயே பிழைப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் தங்களையும், தங்கள் குழந்தைகளையும் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வகையிலே, அரசு மறுபரிசீலனை செய்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்ணோட்டத்தில் முதல் கேள்வியினுடைய விடை 'இல்லை' என்று சொல்லப்பட்டாலும் கூட, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ளவர்கள், பிழைப்பதற்கு வழியில்லாதவர்கள் எல்லாம் அந்தப் பட்டியலிலே வருவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இலவசக் கல்வி பயில, பட்டப் படிப்பு முதலாண்டு வரை பயில அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. முதலாண்டு மட்டும் அல்ல; பட்டப் படிப்பு முடிகிற வரையில் இலவசக் கல்வி படிக்க, 12 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கும் குறைவானது என்று சான்றிதழின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப நன்றி. ஆனால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதிலே, 12 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கும் கீழே உள்ள அந்தப் பெண்களைப் பற்றித்தான் இந்தக் கேள்வி; வருமானம் அதிகமாக இருப்பவர்களுக்கான கேள்வி இல்லை. ஆகையினால், அத்தகைய பெண்களுக்கு, சத்துணவு மையம் அல்லது பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆயாக்கள் இப்படிப்பட்ட வேலைகளைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது வகை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கம்பேஷனேட் கிரவுண்ட்ஸ்' என்ற அடிப்படையில், அந்தத் துறையிலே பணியாற்றி இறந்து போனவர்களுடைய குழந்தைகளுக்கு வேலை கொடுக்க வேண்டும் போது, மிகப் பலர் 8-வது, 9-வது படித்தவர்களாக இருக்கிற காரணத்தினால், அவர்களுக்காகப் புதிய வேலைகளை உருவாக்குகிற வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, பல நேரங்களில் அவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள், ஆசிரியர் பயிற்சி பெறுவதன் மூலமாக உதவி செய்யலாம் என்று அரசு கருதுகிறது. ஆசிரியர் பயிற்சியை, அவர்கள் குறைந்த பட்ச கல்வித் தகுதி பெற்றிருந்தால், அவர்களுக்கு வழங்கினால், அதிக எண்ணிக்கையிலே ஆசிரியர் தேர்வு செய்கிறபோது, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பது நோக்கம்.

1990 ஏப்ரல் 25]

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பட்டப் படிப்பு வரையிலே படித்தவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப் படும் என்று சொன்னார்கள். அதிலே வேலைவாய்ப்பு என்று சொல்லும்போது, ஆசிரியர் பயிற்சி படித்தால் முன்னுரிமை கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். சிலர் பட்டப் படிப்பையே படித்து இளம் விதவைகளாக சில குழந்தைகளோடு இருக்கிற குடும்பங்கள் அவதிப்படுகின்றன. பட்டப் படிப்பு படித்தவர்களை வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுத்து, மற்ற துறைகளிலும் அளிக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நினைவு சரியாக இருக்கு மானால், இளம் விதவைகள் என்ற முறையில், ஓரளவுக்கு அவர்களுக்குக் கருணை காட்டப்படுகிறது. முழு விளக்கம் தேவை யானால், தனிக் கேள்வி போடவும்.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே, ஜாதி, மதம், இனம் பார்க்காமல் கலப்பு மணம் செய்து கொள்கின்ற தம்பதிகளை நம்முடைய தமிழக அரசு உற்சாகப்படுத்துகிறது. ஆனால், அப்படிப்பட்ட கலப்புத் திருமணம் செய்து கொள்கிற தம்பதிகளுக்குப் பிறக்கிற அந்த வாரிசுகள் சமுதாயத்திலே எவ்வளவு சங்கடங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். எனவே அப்படிப்பட்ட கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு, இலவச மாகக் கல்லூரிப் படிப்பு வழங்கப்படுமா? அதைப்போல, அவர் களுக்கு வேலை வழங்குவதிலேயும் முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9–05 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணத் தம்பதிகளினுடைய குழந்தைகள் என்று தனியாக ஒதுக்கீடு செய்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், கலப்பு மணம் செய்து கொண்டவர் களில், யார் மிக மிகப் பின்தங்கியவர்கள்—யாராவது ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருப்பாரேயானால், அதன் பயனாக, அவருக்கு அந்த அடிப்படையிலே முன்னுரிமை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கலப்பு மணத்தில் தாயோ, தந்தையோ, தாழ்த்தப்பட்டவராகவோ, மிக, மிகப் பின் தங்கியவராகவோ இருந்தால் அந்த அடிப்படையிலே உரிமை கேட்கலாம். அந்த வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும்.

திருமதி. ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகளுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு

விழைகின்றது, விதவைகளின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு விதவை, அதுவும் எக்ஸ்-மிலிட்டரிமேனின் விதவை, தான் விதவையான பின்பு, பி.டி. படித்து கல்வித் தகுதியைக் கூட்டிய பின்னர், இரண்டு முறை தேர்வாணையத்தில் அப்பியர் ஆகியும்கூட, வேலை கிடைக்காமல் இருக்கிறார்களே, அப்படிப்பட்ட நிலையைச் சுட்டிக் காட்டினால்—அவர்களுக்கு வயது கிட்டத்தட்ட 34 ஆகிவிட்டது. இனிமேல் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதற்கு வழியில்லை என்ற காரணத்தினால்—அதைப் பரிசீலிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தேர்வாணையத்திற்குப் பல விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளில் அரசு அவ்வப்போது தலையிட முடியாது. அந்த விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கிறபோதுகூட, 200 இடங்களுக்கு 2,000 பேர்களை நேர்முகத் தேர்விற்கு வரச் சொல்லி, ஏறத்தாழ 10 பேருக்கு அல்லது 12 பேருக்கு ஒருவரைத் தான் தேர்ந்தெடுக்க நேரிடுகிறது. இந்த விதிமுறைகளிலுள்ள பிரிவுகள், வகுப்பு உரிமைகள், அந்த அடிப்படையிலே எடுக்கப்படுகிற காரணத்தால் அதிலே சில நேரங்களில் இப்படிப்பட்டவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்காமல் போகலாம். அது எளிதாகக் களையக் கூடிய ஒன்றாக இல்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கக்கூடிய, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்களுக்கு 7, 8 வருடங்களாகியும் வேலைவாய்ப்புக் கிடைப்பதில்லை. அவர்கள் வாழ்க்கையே அதனால் பாழாகி விடுகிறது, திருமணமும் செய்ய முடியவில்லை. வேலைக்கும் போக முடியவில்லை. ஆகவே, அந்த விதிமுறைகளைக் கொஞ்சம் தளர்த்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்காவது, ஏதோ படிப்பு முடித்து 3 வருடம், 2 வருடத்திலே வேலை கிடைப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவர்களுடைய விகிதாச்சாரப்படி கட்டாயமாக இடம் ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துகிறது. எந்தத் துறையிலேயும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய விகிதாச்சாரம் குறைந்து விடக் கூடாது என்பதை வற்புறுத்துகிறது. அதற்கு மேலும் பெண்களுக்குக் கிடைக்கவில்லையே, வயதாகிறதே என்றால், எட்டாவது படித்தவர்கட்குத் திருமண நிதி உதவியாக 5,000 ரூபாய் உதவுவது என்று இந்த அரசு முடிவெடுத்து உதவிக் கொண்டிருக்கிறது.